## புள்ளி வழங்கும் திட்டம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## இஸ்லாம் - தரம் 11

### பகுதிI

| | | | |
|---|---|---|---|
| 1 – 3 | 11 – 3 | 21 – 2 | 31 – 3 |
| 2 – 2 | 12 – 2 | 22 – 3 | 32 – 3 |
| 3 – 2 | 13 – 1 | 23 – 2 | 33 – 3 |
| 4 – 2 | 14 – 4 | 24 – 2 | 34 – 1 |
| 5 – 3 | 15 – 3 | 25 – 1 | 35 – 2 |
| 6 – 3 | 16 – 2 | 26 – 3 | 36 – 3 |
| 7 – 3 | 17 – 2 | 27 – 1 | 37 – 4 |
| 8 – 4 | 18 – 2 | 28 – 3 | 38 – 3 |
| 9 – 2 | 19 – 4 | 29 – 3 | 39 – 1 |
| 10 –2 | 20 – 2 | 30 – 3 | 40 – 2 |

### பகுதிII

**வினா :01.**

1) நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் அவர்களது தோழர்களும் கொண்டிருந்த நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்தமுறையைப் பின்பற்றுவோரையே குறிக்கின்றது.

2) இப்பதம் நாத்திகத்தைக் குறிக்கப்பயன்படுகிறது. இறைவன் இல்லை என நிராகரித்து சமயங்களையும் இறைவழிகாட்டலையும் இறைத்தூதர்களையும் நிராகரிப்பதே இவர்களின் பிரதான இலட்சியமாகும்.

3) (அ.) அஸ்வதுல் அன்ஸி (ஆ.) முஸைலமா

4) (அ.) நிய்யத்துவைத்தல் (ஆ.) தகுதியானவர்களுக்குபகிர்ந்தளித்தல்

5) கிலாபத்

6) (அ.) வலீத் இப்னுமுகீரா (ஆ) லபீத்

7) வஹிமத்துவ்வு–அல்குர்ஆன்

வஹிகைருமத்துவ்வு– அஸ்ஸுன்னா அல் - ஹதீஸ்

8) (அ) பர்ளானஐவேளைத்தொழுகை

(ஆ) பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடத்தல்

(இ) குடும்பத்தைப் பராமரித்தல்

(ஈ) றமழான் மாதநோன்பு (எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின்)

9) (அ) ஸலாஹுத்தீன் ஐயூபி (ஆ) மஹ்மூத் அல்குதுஸ்

10) நிகாஹ் ஸஹீஹ் (ஆ) நிகாஹ் முத்ஆ

**(2 x 10 =புள்ளிகள்)**

**வினா : 02.**

1) இமாம் அஹ்மத் இன்னு ஹன்பல் / இமாம் அபுல்ஹஸன்அல் அஷ்அரீ

இமாம் அபூமன்ஸூர் அல்மாதுருதி / இமாம் அபூ ஜஃபர் அத்தஹாவி

2) (அ) போதியளவு வருமானம் உள்ளவர்

(ஆ) அடிமை (இ) பனூஹாஷிம்,பனூ முத்தலிப் குடும்பத்தினர்

(ஈ) ஸக்காத் கொடுப்பவரால் தாபரிக்கக் கடமைப்பட்டவர்கள்

(உ) முஸ்லிம் அல்லாதவர் (எவையேனும் மூன்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

2) (1) தன்னைப் பற்றி ஒரு வசனமேனும் தெரிந்திருப்பின் அதை எத்திவைக்குமாறு நபி (ஸல்) அவர்கள் பணித்தமை.
(2) தான் கூறாததைக் கூறியதாகப் பொய்யாக முன்வைப்பவர்கள் நரகில் தனது இருப்பிடத்தை ஆக்கிக் கொள்வர் என எச்சரித்தமை
(3) நபி (ஸல்) அவர்கள் ஹதீஸ்களைத் திருத்தமாக மனனமிடச் செய்வதிலும்
எழுதிவைப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டியமை
(4) ஹதீஸ்களைக் கற்றல் - கற்பித்தலுக்கென முக்கிய ஸஹாபாக்களை நியமித்தல்
(5) இப்பணியில் அஸ்ஹாபுஸ் ஸுப்பாக்களையும் நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்தியமை. ஐந்து குறிப்புகள் எழுதப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 01 புள்ளி விகிதம் 5 புள்ளிகள் வழங்கவேண்டும்.

**வினா : 03**

1) இறைத்தூதர்கள் எனப்படுபவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டலை உலகிற்கு எத்திவைக்கும் பணியை மேற்கொண்டவர்கள் அவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களையும் போதனைகளையும் உம்மத்தினருக்கு எத்தி வைக்கும் பணியே ரிஸாலத் பணி எனப்படுகிறது.

2) என்னுடைய உம்மத்தில் 30 பொய்யர்கள் தோன்றுவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தாம் நபியென்று வாதாட்டம் செய்வார்கள் ஆயினும் நானே நபிமார்களுக்கெல்லாம் இறுதியானவனாக இருக்கின்றேன் எனக்குப் பின் வேறு எந்த நபியும் இல்லை (அபூதாவுத்)

(குறிப்பு: இதுபோன்ற பாடநூலில் தரப்பட்டுள்ள ஹதீஸ்களில் ஏதேனும் ஒன்றை எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்குக.)

3) (அ) ஆண்பெண் உடலுறவு (ஆ) விந்து வெளிப்படல்

(இ) புதிதாக இஸ்லாத்தில் நுழைதல் (ஈ) ஹைழ், நிபாஸ் வெளியாகுதல்

(உ) மரணம் சம்பவித்தல்

சுத்தமாகும் முறை :

பர்ளான குளிப்பை நிறைவேற்றுகின்றேன் என நிய்யத்து வைத்து முழு உடம்பின் பகுதிகளையும் நீரினால் நனைத்துக் கொள்ளல் அதாவது குளித்துக் கொள்ளல்.

(பெருந்தொடக்கை உண்டாக்கும் விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 3 புள்ளிகளும் சுத்தமாகும் முறை எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகளுமாக 5 புள்ளிகள் வழங்கப்படும்.)

(2+3+5=10)

**வினா :04**

1) அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல்
அல்லாஹ்வின் படைப்பினங்கள் மீது அன்புவைத்தல்

2) (அ) இரண்டு கடல்கள் ஒன்றோடொன்று சந்திக்கும் போது அவை இரண்டிற்கும் இடையில் ஒரு தடுப்பை ஏற்படுத்தியதாக கூறுகிறது. இது ஒரு அறிவியல் சார்ந்தஅற்புதமாகும்.
(ஆ) சிசு உருவாக்கத்தைப் பற்றிய அல்குர்ஆனின் கருத்துக்கள். இது ஒரு அறிவியல் சார்ந்த அற்புதம்
(இ) தேனில் மருத்துவக் குணம் உண்டென்பதை அல்குர்ஆன் பேசுகிறது.
(ஈ) பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல ஒட்சிசனின் அடர்த்தி குறைகிறது என்பதை அல்குர்ஆன் பேசுகிறது. இது ஒரு அறிவியல் சார்ந்த அற்புதமாகும்
(உ) பிர்அவ்னின் உடம்பைப் பாதுகாத்து வைப்பதாக அல்குர்ஆன் கூறும் இன்னுமொரு அற்புதமாகும்.
(இவை போன்று பாடநூலில் தரப்பட்டுள்ளவைகளில் 3விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 3 புள்ளிகள் வழங்குக.)

3) (அ) நிய்யத்து வைத்து இஹ்ராம் அணிதல்.
(ஆ) துல்ஹஜ் 9ம் நாள் அரபாவில் தரித்தல்.
(இ) தவாபுல் இபாழாவை நிறைவேற்றுதல்.
(ஈ) ஸஈ செய்தல்.
(உ) தலை முடி களைதல்.
(ஊ) ஒழுங்கு முறையாகச் செய்தல்.
(அர்கான்கள் 6ஐயும் எழுதியிருப்பின் 3 புள்ளிகளும் விளக்கப்பட்டிருப்பின் 2 புள்ளிகளுமாக மொத்தம் 5 புள்ளிகள் வழங்கவேண்டும்.)

**வினா :05**

1) மஸ்ஜிதுல் ஹராம் /மஸ்ஜிதுன் நபவி/ மஸ்ஜிதுல் அக்ஸா

2) (அ) இறைவனுக்கென்ற தூய எண்ணத்துடன் தவ்பா கேட்டல்.

(ஆ) உடனடியாக பாவத்தை விட்டுவிடல்.

(இ) செய்த பாவத்தை நினைத்து கவலைப்படல். செய்த பாவம் சகமனிதனோடு தொடர்புபட்டிருந்தால் அவனிடம் மன்னிப்பு வேண்டிய நிலையில் இறைவனிடம் இறைஞ்சல்.

(இவற்றுள் ஏதேனும் 3 எழுதப்பட்டிருப்பின் 3 புள்ளிகள் வழங்கவேண்டும்)

3) ஹதீஸ் கிரந்தங்கள் இயற்பெயர்கள்

i. ஸஹீஹுல் புஹாரி - முஹம்மத்

ii. ஸஹீஹுல் முஸ்லிம் - முஸ்லிம்

iii. ஜாமிஉத்திர்மிதி - முஹம்மத்

iv. ஸுனன் அபூதாவுத் - ஸுலைமான்

v. ஸுனன் நஸாஈ - அஹ்மத்

vi. ஸுனன் இப்னுமாஜா - முஹம்மத்

(ஏதேனும் 5 ஹதீஸ் கிரந்தங்களுடன் பொருத்தமான இயற்பெயர்கள் எழுதப்பட்டிருப்பின்

ஒன்றுக்கு 1 புள்ளி விகிதம் 5 புள்ளிகள்)

**வினா :06**

1) புதிய பிரச்சினை தோன்றி அதற்கான தீர்வை அல்குர்ஆனோ, ஸுன்னாவோ நேரடியாக வழங்கியிராதபோது அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் ஆழமான அறிவுள்ளவர்கள் அவ்விரண்டையும் அடிப்படையாக வைத்து தீர்வினைப் பெறும் ஆய்வு முயற்சியே இஜ்திஹாத் எனப்படுகிறது.

2) i. தக்வாவும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல்.

ii. அரபுமொழியில் பாண்டித்தியம் பெற்றவராக இருத்தல்.

iii. அல்குர்ஆன் - ஸுன்னாவில் ஆழமான அறிவு

iv. அவற்றுடன் தொடர்புடைய கலைகளில் நிபுணத்துவம்

v. முன்னைய இஜ்திஹாத் பற்றிய விளக்கம்

vi.ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினைகள் பற்றிய தெளிவு
(ஒன்றுக்கு அரை புள்ளி விகிதம் 3 புள்ளிகளை வழங்குக.

3) i. அல்குர்ஆன் ஓதும் முறையை ஒன்றுபடுத்தியவர் (இதனால் ஜாமிஉல் குர்ஆன் என்ற சிறப்புப் பெயரை பெற்றவர்)

ii.கடற்படையை முதன் முதலில் உருவாக்கியவர்

iii. ஆட்சியை விஸ்தரிப்புச் செய்தவர். (அலெக்சாந்திரிய்யா முதல் வடஆபிரிக்கா நாடுகள் வரை)

iv.ஹி. 26ல் மஸ்ஜிதுல் ஹராமை விஸ்தரிப்புச் செய்தல்.

v.பைதுல்மாலின் பணிகளை பரவலடையச் செய்தார்.

vi.கால்வாய்கள், பாதைகள், பொதுக்கிணறுகளை அமைத்து மக்களுக்கு பரவலான சேவை செய்தல்.

**வினா :07**

1) i. நபி (ஸல்) அவர்களின் 40ம் வயதில் - ஹிராமலைக்குகையில் வைத்து அல்குர்ஆன் அருளப்பட்டது.

ii.லைலதுல்கத்ர் என்ற இரவில் முதல் வஹி கிடைத்தது.

iii.நபி (ஸல்) அவர்கள் ஹிராக்குகையில் தனித்திருந்த வேலை ஜிப்ரீல் (அலை) தோன்றி இக்ர.ஃ. ஓதுவீராக என்றார்கள். எனக்கு ஓதத் தெரியாது எனக்கூறினார்.

iv. ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களை இறுக்கமாக கட்டியணைத்து மீண்டும் ஓதுவீராக எனக்கூற ஓதத்தெரியாதென கூறிவிட்டார்கள். இவ்வாறு மூன்று விடுத்தம் நடைபெற்றது.

v. அதன்பிறகு ஸூறா அலக்கின் முதல் ஐந்து வசனங்களை ஓதிக்காட்ட நபி (ஸல்) அவர்களும் ஓதினார்கள்.

vi. இச்சம்பவத்தைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் அதிர்ச்சியும் பயமும் அடைந்தவர்களாக வீட்டை நோக்கிச் சென்று என்னைப் போர்த்துங்கள் எனக்கூறிக் கொண்டு நடந்தவற்றை மனைவி கதீஜா (றழி) அவர்களிடம் கூறினார்கள்.

vii. நடந்தவற்றைக் கேட்டறிந்த கதீஜா (றழி) முஹம்மத் நபி (ஸல்) அவர்களைத் தமது உறவினரான வரகா பின் நவ்பலிடம் அழைத்துச் சென்று தைரியமூட்டினார்கள். (இது போன்ற 5 விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

**2) தேசியநலனில் முஸ்லிம்களின் பங்களிப்பு**

- இலங்கையின் மாணிக்கக் கற்கள், யானைத்தந்தம், வாசனைத்திரவியங்கள் போன்றவற்றை வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்றதன் மூலம் அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ளல்
- விவசாயத்தை இலங்கை நாட்டில் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.
- நெசவுத் தொழிலாளர்களை அழைத்துவந்து இலங்கையில் அறிமுகப்படுத்தினர்.
- தவளம் என்ற போக்குவரத்து முறையை இலங்கையில் அறிமுகப்படுத்தினர்
- சிங்கள மன்னர்களோடு இணைந்து நாட்டின் முன்னேற்றததிற்காக உழைத்தனர்.
- இலங்கை சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஏனைய இனத்தவர்களுடன் இணைந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராட்டம் செய்தமை

**3)அஸ் - ஸப்ர் (பொறுமை)**

- பொறுமை மனிதவாழ்வில் முக்கியமான பண்பாகும்.
- ஒரு முஸ்லிமின் ஈருலக வாழ்வின் வெற்றிக்கும் அடிப்படையாகும்.
- ‘‘பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் நீங்கள் உதவி தேடுங்கள்.’’ (அல்பகரா-45) என்ற திருமறையின் வசனம் இதை உணர்த்துகிறது.
- அல்லாஹ் தான் நன்மைகளைத் தர வேண்டுமென விரும்புகின்றவர்களுக்கு (அவர்களின் பொறுமையை சோதிப்பதற்காக) சோதனைகளை ஏற்படுத்துகிறான். (புஹாரி)
- பொறுமைக்கு கூலியாக இறைவன் சுவர்க்கத்தை வழங்குகின்றான்.

(இவைபோன்ற 5 விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள் வழங்குக.)

**4)இமாம் ஷாபிஈ(ரஹ்)**

- இமாம் ஷாபிஈ (ரஹ்) பலஸ்தீன் காஸாவில் ஹிஜ்ரி 150 இல் பிறந்தார்.
- இவரின் சிறப்புப்பெயர் ஆலிமுல்குறைஷ் என்பதாகும்.
- மக்கா, மதீனாவிலும் கற்வி கற்று பக்தாதில் கல்விப் போதனை நடாத்தி வந்தனர்.
- அரபு இலக்கியம், மருத்துவம், பிக்ஹு போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- முஸ்னத் இமாம் ஷாபிஈ, கிதாமுல் உம்மு, அர்ரிஸாலதுல் உஸூலிய்யா ஆகியன இவரது பிரதான நூல்களாகும்.
- சுல்தான் ஸலாஹுத்தீனின் காலத்தில் எகிப்தில் அரச மத்ஹபாக பிரகடனப்படுத்தப்பட்டது. (இதுபோன்ற 5 விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள் தரப்படவேண்டும்.